**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 52/2022**
**Deposition of witness of Defendant – D.W.1(உமா மகேஸ்வரி)**
**04.01.2024**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

தாவா சொத்து நான் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். ராமன் செட்டியார் மற்றும் ரெங்கன் செட்டியாரின் வாரிசுகளிடம் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்திற்கு நாளது தேதி வரை ராமன் செட்டியார் மற்றும் ரெங்கன் செட்டியார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா வா.சா.ஆ, 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா மாறுதல் கோரி நான் வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேனா என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். ஒரு சொத்தை கிரையம் கொடுக்க வேண்டுமென்றால் பத்திரம் மற்றும் பட்டா இருக்க வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் தான் வாதிக்கு பதிவு செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். எனது எதிர் வழக்குரைக்கு யார் விவரம் சொன்னார்கள் என்றால் பழனியம்மாள் சொல்லி இருப்பார். பழனியம்மாள் சொல்லி தயார் செய்ததாக சொல்லும் எதிர்வழக்குரையில் நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் வாதிக்கு எழுதி கொடுக்கப்பட்ட கிரைய ஒப்பந்தம் கடன் தொகைக்கு பிணையமாக எழுதி கொடுக்கப்பட்டது என குறிப்பிடபட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 பத்திரத்தை பதிவு செய்வதற்கு விராலிமலை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நான் சென்றேனா என்றால் கையெழுத்து போட அழைத்தார்கள் அதனால் சென்றேன். அதில் ராமசாமி, நீலா, ஆன்டப்பன் ஆகியோர் நான் கையெழுத்து போட்ட பிறகு சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரத்தின் படி ரூ.5 லட்சம் பெறப்பட்டது என்றால் சரிதான். அந்த பணம் ரொக்கமாக கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு கிரையப்பத்திரம் மற்றும் கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு இடையே உள்ள வித்யாசம் தெரியும் என்றால் சரிதான். கடன் வாங்கினால் அதற்கு கேட்புக்கடனுறுதி சீட்டு அல்லது அடமான கடன் பத்திரம் எழுதிகொடுப்பார்கள் என்றால் சரிதான். பணத்தை திருப்பி கொடுத்ததற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை வா.சா.ஆ.4 ன் படி ரூ.2 லட்சத்திற்கு கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அது

என்ன ஆவணம் என்று தெரியாது என்றால் சரிதான். எதற்காக அது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியாது என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்துக்கள் யாருடையது என்று தெரியாது என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் பொய் என்றும் வழக்கின் தோதிற்காக பி.வா.சா.ஆ.1 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த ஆவணத்திற்கும் வாதிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதியிடம் முன்பணம் பெற்று கொண்டு தாவா சொத்தை கிரையம் கொடுப்பதற்காக கிரைய ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.1 எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற வாதி எப்போதும் தயாராகவே இருந்தார் என்றால் சரியல்ல. நான் அதன்படி செயல்பட்டு பட்டா மாறுதல் செய்து அளவீடு செய்து மீதி தொகையை பெற்று கொண்டு கிரைய பத்திரம் எழுதி கொடுக்க தயாராக இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**